ADDYSG CYMRU
EDUCATION WALES
cenhadaeth ein cenedl | our national mission

Llywodraeth Cymru
Welsh Government



# வேல்ஸ் பாடத்திட்டம்

## 3 மற்றும் 4 வயதினருக்கான மழலையர் கல்வி

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான வழிகாட்டி

# உள்ளடக்கம்


மழலையர் கல்வி என்றால் என்ன? 3

மழலையர் கல்வி மூலம் எனது குழந்தை எப்போது பலனடையும்? 4

எவ்வாறு மழலையர் கல்வி அளிக்கப்படுகிறது? 5

எனது குழந்தையின் மழலையர் கல்வியின் பலன்கள் யாவை? 6

விளையாட்டு வாயிலாகக் கற்றல் என்றால் என்ன? 7

எனது குழந்தை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளுமா? 8

மழலையர் கல்விக்கான இடத்தைக் கண்டுகொள்வது எப்படி? 9

எனது குழந்தையின் தேவைகளும் வளர்ச்சியும் எவ்வாறு மதிப்பிடப்படும்? 10

எனது குழந்தைக்கு ஆதரவு குறித்த கூடுதல் தகவல்களை எங்கு காணலாம்? 11



OGL © Crown copyright 2024, Welsh Government, WG50158, Digital ISBN 978-1-83625-236-8
Mae’r ddogfen hon ar gael yn Gymraeg hefyd / இந்த ஆவணம் வெல்ஷ் மொழியிலும் கிடைக்கிறது
Rydym yn croesawu gohebiaeth a galwadau ffôn yn Gymraeg / வெல்ஷ் மொழியில் கடிதத் தொடர்பையும் தொலைபேசி அழைப்புகளையும் வரவேற்கிறோம்

# மழலையர் கல்வி என்றால் என்ன?



**மழலையர் கல்வி என்பது மூன்று மற்றும் நான்கு வயதுக் குழந்தைகள் சட்டப்பூர்வக் கல்விக்குள் நுழைவதற்குமுன் பள்ளிக்கூடத்திலோ அல்லது மழலையர் கல்வி அளிப்பதற்காக உங்கள் உள்ளூர் ஆணையத்தின் நிதியளிப்பில் குழந்தை பராமரிப்பு அமைப்பிலோ கல்வியில் நேரம் செலவிடும் காலம்.**

இது உங்கள் குழந்தையின் வாழ்வில் மிக முக்கியமான கட்டம். அவர்களின் வருங்கால கற்றலிலும் அவர்களின் உடல் மற்றும் உணர்வுரீதியான வளர்ச்சியிலும் அடித்தளமிடுகிறது. இதனால்தான் வேல்ஸ் பாடத்திட்டத்தின் பகுதியாக மழலையர் கல்வி உள்ளது.

**உங்கள் உள்ளூர் ஆணைய இணையதளத்தில் ஏற்பாடுகள் குறித்த கூடுதல் தகவல்களைக் காணலாம்.**

# மழலையர் கல்வி மூலம் எனது குழந்தை எப்போது பலனடையும்?



உள்ளூர் ஆணையங்கள் நிதியளித்து, பிறந்த தேதியைப் பொறுத்து மூன்று மற்றும் நான்கு வயதுக் குழந்தைகளுக்காக பகுதிநேர மழலையர் கல்விக்கான (குறைந்தது வாரத்துக்கு 10 மணிநேரம்) இடத்தைக் கிடைக்கச் செய்ய வேண்டும். கீழ்க்கண்ட அட்டவணை அந்த இடம் எப்போது உங்கள் குழந்தைக்குக் கிடைக்கப் பெறும் என்பதைக் காட்டுகிறது.

| குழந்தையின் பிறந்தநாள் | எனது குழந்தை நிதியளிக்கப்பட்ட மழலையர் இடத்தை எப்போது பெறும்? |
|---|---|
| செப்டம்பர் 1 முதல் டிசம்பர் 31 வரை | பருவத் தொடக்கம் ஜனவரி 1 அன்று அல்லது அதன்பின் |
| ஜனவரி 1 முதல் மார்ச் 31 வரை | பருவத் தொடக்கம் ஏப்ரல் 1 அன்று அல்லது அதன்பின் |
| ஏப்ரல் 1 முதல் ஆகஸ்ட் 31 வரை | பருவத் தொடக்கம் செப்டம்பர் 1 அன்று அல்லது அதன்பின் |

# எவ்வாறு மழலையர் கல்வி அளிக்கப்படுகிறது?

**வேல்ஸ் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, வேல்ஸ் அரசாங்கம் மழலையர் கல்வி வழங்கும் பள்ளிக்கூடங்கள் தங்கள் சொந்தப் பாடத்திட்டத்தை மேம்படுத்துவதையும் குழந்தை பராமரிப்பு அமைப்புகளுக்கான பாடத்திட்டத்தையும் ஆதரிப்பதற்கான வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.**

அனைத்து ஏற்பாடுகளின் மையமாகவும் குழந்தை வளர்ச்சி உள்ளது. இது குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்றாலும் அல்லது நிதியளிப்புடன் பராமரிபில்லாத மழலையர் அமைப்புக்குச் சென்றாலும் அவர்களின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கிறது. வேல்ஸ் பாடத்திட்டமானது கற்பவர்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக வடிவமைக்கப்படுகிறது. இதில் கூடுதல் கற்றல் தேவைகள் உடையோரும் அடங்குவர். உங்கள் குழந்தைக்கு அவர்களின் கற்றல் பயணத்தில் முன்னேற்றத்துக்குத் தேவையான ஆதரவினைப் பெறுவர்.

இந்த அணுகுமுறை ஒரு அமைப்பிலிருந்து பள்ளிச் சூழலுக்கு இலகுவாக மாறுவதை உறுதிப்படுத்தவும் உதவுகிறது.

**மழலையர் கல்வியில் கலந்துகொள்ளும் குழந்தைகளின் காணொளியைப் பாருங்கள்**

**மேலும் அறிய:**

**வேல்ஸ் பாடத்திட்டம்: 3 மற்றும் 4 வயதானோருக்கான மழலையர் கல்வி - பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான ஓர் அறிமுகம்**



# எனது குழந்தையின் மழலையர் கல்வியின் பலன்கள் யாவை?



**மழலையர் கல்வி உள்கூடத்திலும் வெளியிடத்திலும் விளையாட்டு மூலம் உங்கள் குழந்தை கற்கச் செய்கிறது. இந்தப் பாடத்திட்டம் ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் கற்றல் மையத்தில் இருக்கும் வாய்ப்பை உறுதிசெய்கிறது.**

உங்கள் குழந்தையின் ஆர்வங்கள் பரிசீலிக்கப்படும். அவர்களுக்கென்றே உள்ள அலுவலரின் ஆதரவு அளிக்கப்படும் வேளையில் தங்கள் கற்றல் குறித்த தெரிவுகளைச் செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள். உங்கள் குழந்தையின் ஒவ்வொரு கற்றல் படியிலும் அலுவலர் ஆதரவு அளிப்பார். கற்றல் அனுபவங்கள் செயல்முறை சார்ந்ததாக, வேடிக்கையானதாக, விளையாட்டு அடிப்படையிலானதாக இருக்கும். இந்த அணுகுமுறை கற்றலுக்கான நேர்மறையான மனோபாவத்தை வளர்ப்பதாக அறியப்படுகிறது.

# விளையாட்டு வாயிலாகக் கற்றல் என்றால் என்ன?



**விளையாட்டு மூலமாகவே இளம் குழந்தைகள் இந்த உலகைப் புரிந்துகொள்கிறார்கள். இந்த கற்றலுக்கான சக்திவாய்ந்த வாகனம், குழந்தைகளின் பேச்சு, மொழி மற்றும் தகவல்தொடர்பு திறமைகளுக்கும் அதேபோல் அவர்களின் சமூக மற்றும் உடல்ரீதியான திறமைகளுக்கும் ஆதரவளித்து உதவக்கூடியதாக உள்ளது.**

உங்கள் குழந்தை தனது வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் முழுமையான அர்த்தமுள்ள கற்றலிலிருந்து பலனடையும். வயது வந்தோரை ஈடுபடுத்துவதால் பயனுள்ள சூழ்நிலைகளில் ஈடுபாடு மிக்க அனுபவங்களைத் தரும். உங்கள் குழந்தையின் ஆர்வங்களோடு தொடர்புடைய யதார்த்த அனுபவங்களைத் திட்டமிடுவதற்கு அவர்கள் அறிவுத்திறனையும் குழந்தைகளின் அவதானிப்பையும் பயன்படுத்துகிறது. இது விளையாட்டு அடிப்படையிலான அணுகுமுறை வாயிலாக அவர்கள் வளர ஆதரவை வழங்கும்.

விளையாட்டு குழந்தைகள் தங்கள் முனைப்பைக் காட்டவும், இடர்களை எதிர்கொள்ளவும் தோல்வி பயமின்றி பிழைகளிலிருந்தும் தவறுகளிலிருந்தும் கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. உங்கள் குழந்தை ஈடுபடக்கூடிய பல்வகை விளையாட்டுகள் உள்ளன. இவற்றில் பாத்திரமேற்று நடித்தல், படைப்பூக்க விளையாட்டு, ஆராயும் விளையாட்டு மற்றும் கற்பனை செய்து விளையாடுதல் ஆகியவை அடங்கும்.

# எனது குழந்தை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளுமா?



**மழலையர் கல்வி நல்ல தகவல்தொடர்பு திறமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உங்கள் குழந்தை பள்ளியில் அல்லது அமைப்பில் வயதுவந்தோருடன் ஒருவருக்கொருவர் உரையாடுவது மூலம் தனது பேச்சு மற்றும் கவனிக்கும் திறமைகளை வளர்க்க ஊக்குவிக்கப்படும்.**

கதைகள் மற்றும் புத்தகங்கள் அளிக்கும் குதூகலத்துக்கு அறிமுகப்படுத்தப்படுவார்கள். பாடல்கள், ரைம்ஸ்கள் மற்றும் வார்த்தை விளையாட்டுகளில் ஈடுபடுவர். தங்கள் எண்ணங்களையும் யோசனைகளையும் வெளிப்படுத்த அடையாளமிடல் மற்றும் வரைதலைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவர். விளையாட்டு மைதானத்தில் சாக்கட்டி, காகிதத்தில் வர்ணம், தூரிகைகள் மற்றும் குறிப்பான்கள் போன்ற பல்வகை மேற்பரப்புகளைப் பயன்படுத்துவதற்கு பலதரப்பட்ட மூலவளங்கள் அவர்களுக்கு அணுகக் கிடைக்கும்.

குழதைகள் தங்கள் ஆரம்பக்கட்ட வாசிப்பு மற்றும் எழுதுதல் திறமைகளை வளர்த்து வருகையில், அவர்கள் தங்கள் சொந்தப் பெயர், எழுத்துகள் மற்றும் எண்களைக் கவனிக்கவும் அடையாளம் காணவும் தொடங்கலாம். இதில் மிக முக்கியமான விசயம் இவற்றைக் குறிக்கவும் அவை குறித்துப் பேசவும் குழந்தைகள் நம்பிக்கை பெறுகிறார்கள். அவர்களுக்கு முக்கியமான சின்னங்களையும் எழுத்துகளையும் கவனிக்கத் தொடங்குகிறார்கள்.

# மழலையர் கல்விக்கான இடத்தைக் கண்டுகொள்வது எப்படி?



**உங்கள் உள்ளூர் ஆணையத்தின் குடும்பத் தகவல் சேவையை நீங்கள் தொடர்புகொள்ளலாம். அது உங்களுக்கு உங்கள் பகுதியிலுள்ள மழலையர் கல்விக்கான பகுதிநேர இடங்களை வழங்கும் குழந்தைப் பராமரிப்பு அமைப்புகள் மற்றும் பள்ளிகள் குறித்த தகவல்களையும் ஆதரவையும் வழங்கும்.**

சரியான மழலையர் இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான சில உதவிக்குறிப்புகள் இதோ:

- குழந்தைப் பராமரிப்பு அமைப்பு அல்லது பள்ளியைப் பார்வையிடுங்கள் – இவற்றில் பல உங்களுக்குச் சுற்றிக் காட்டக்கூடும்
- சமீபத்திய Estyn ஆய்வறிக்கைகளை **www.estyn.gov.wales** என்ற தளத்தில் வாசியுங்கள்
- அவர்கள் ஆதரிக்கும் அமைப்புகள் குறித்து கூடுதல் தகவல்களைக் காண கீழேயுள்ள துவக்க ஆண்டுகள் அமைப்புகளின் இணையதளங்களைப் பார்வையிடுங்கள்
- துவக்க ஆண்டுகள் வேல்ஸ் **www.earlyyears.wales/en**
- முடியாத் மெய்த்ரின் **www.meithrin.cymru**
- நேஷனல் டே நர்சரீஸ் அசோசியேஷன் **www.ndna.org.uk**
- PACEY (Professional Association for Childcare and Early Years) **www.pacey.org.uk**

# எனது குழந்தையின் தேவைகளும் வளர்ச்சியும் எவ்வாறு மதிப்பிடப்படும்?

**ஒவ்வொரு குழந்தையும் அதற்கான சொந்த வேகத்தில் முன்னேற்றம் காணச் செய்யவும், அவர்களுக்கு ஆதரவளிப்பதை உறுதிசெய்யவும், தேவையானபோது சவாலளிக்கவும் செய்து ஆதரிப்பதில் மதிப்பீடு முக்கியப் பங்கு வகிக்கிறது.**
உங்கள் குழந்தையால் என்ன செய்ய முடியும் என்பதைக் கண்டறிவதை மதிப்பீடு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது திறமைவாய்ந்த பயிற்சியாளர்களால் உங்கள் குழந்தை விளையாடும்போது அவதானிப்பதன் மூலம் நடத்தப்படுகிறது. தொடர்ச்சியான மதிப்பீட்டிலிருந்து பேச்சு, மொழி, தகவல்தொடர்பு திறமைகள், அத்துடன் சமூகம் மற்றும் உடல் திறமைகள் உட்பட உங்கள் குழந்தையின் முழுமையான வளர்ச்சி குறித்த சிறப்பான புரிதல் கிடைக்கும். நல்ல தரமான மதிப்பீடு கூடுதல் உதவி தேவைப்படக்கூடிய அல்லது தங்கள் இயல்திறனை எட்டுவதற்கு அவர்களுக்கு உதவுவதற்கு சவால் தேவைப்படும் குழந்தைகளை அடையாளம் காணும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் வளர்ச்சி தனித்துவமானது என்பதை அங்கீகரிப்பது முக்கியம். உங்கள் குழந்தையின் வளர்ச்சி தொடர்பான தகவல்களை மழலையர் கல்வியின்போது பெறுவீர்கள். மதிப்பீடு குறித்த கூடுதல் தகவல்கள் உங்கள் குழந்தையின் மழலையர் கல்விக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் பள்ளி அல்லது குழந்தைப் பராமரிப்பு அமைப்பிலிருந்து கிடைக்கும்.



# எனது குழந்தைக்கு ஆதரவு குறித்த கூடுதல் தகவல்களை எங்கு காணலாம்?

**உங்கள் குழந்தை வாழ்க்கையில் மிகச் சிறந்த தொடக்கத்தைப் பெறுகிறது என்பதில் நீங்கள்**

## நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

தி சைல்ட்கேர் ஆஃபர் ஃபார் வேல்ஸ் அரசாங்க நிதியளிப்புடன் ஆரம்பகட்ட கல்வியையும் வேல்ஸில் வாழும் 3 மற்றும் 4 வயது குழந்தைகளின் பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் குழந்தை பராமரிப்பினையும் 30 மணிநேரம் வரை வழங்குகிறது. இது குறைந்தது 10 மணிநேர துவக்ககட்ட கல்வியையும் அதிகபட்சம் 20 மணிநேர நிதியளிக்கப்பட்ட குழந்தை பராமரிப்பையும் கொண்டிருக்கும். உள்ளூர் ஆணையங்களுக்கேற்ப இது மாறுபடலாம்.

இதற்குத் தகுதிபெற பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் வேலையில் இருப்பவர்களாக அல்லது உயர்நிலை அல்லது மேற்படிப்பு படிப்பவர்களாக இருக்க வேண்டும்.

நீங்களும் உங்கள் குழந்தையும் தகுதி பெறுகிறீர்களா எனச் சோதிக்க அல்லது சைல்ட்கேர் ஆஃபருக்கு விண்ணப்பிக்க **www.gov.wales/get-30-hours-childcare-3-and-4-year-olds** என்ற பக்கத்தைப் பார்வையிடவும்

**Teulu Cymru** ஒரே இடத்தில் வேல்ஸிலுள்ள குடும்பங்களுக்கு வெல்ஷ் அரசாங்கத் தகவல்களை ஒன்றிணைத்து வழங்குகிறது. நடைமுறை மற்றும் நிதிசார் ஆதரவுக்கு **www.gov.wales/teulu-cymru** வருகை தாருங்கள். மேலும் Teulu Cymru ஐ முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமில் பின் தொடருங்கள்.

குடும்ப தகவல் சேவைகள் (FIS) கல்வி உட்பட பல்வகை குடும்ப தலைப்புகளை இலவசமான, நடுநிலையான, நாளது தேதியிலான தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதலை **www.fis.wales** என்ற தளத்தில் வழங்குகிறது.

வெல்ஷ் அரசாங்கம் **'Talk with Me'** திட்டம் மூலம் மூலவளங்களையும் ஆலோசனையையும் வழங்குகிறது. இது உங்கள் குழந்தையின் பேச்சு, மொழி மற்றும் தகவல் தொடர்பினை ஆதரிக்க உங்களை ஊக்குவிக்கிறது.

**Flying Start** திட்டமானது வேல்ஸிலுள்ள ஃப்ளையிங் ஸ்டார்ட் பிராந்தியத்தில் நலிவுற்ற பகுதிகளில் வாழும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கிறது. இரண்டு முதல் மூன்று வயதான குழந்தைகள் பள்ளிப் பருவத்துடன் ஏற்ப வாரத்துக்கு 12.5 மணிநேரம், ஆண்டுக்கு 39 வாரங்கள் என Flying Start குழந்தை பராமரிப்பு ஒதுக்கீடு பெற உரிமை உண்டு. தகுதி வாய்ந்த குழந்தைகள் தங்கள் இரண்டாவது பிறந்தநாளுக்குப் பிந்தைய பருவத்திலிருந்து மூன்றாவது பிறந்தநாளுக்குப் பிந்தைய பருவம் வரையிலும் குழந்தைப் பராமரிப்பு இடங்களை எடுத்துக் கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு, உங்கள் உள்ளூர் ஆணையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.